www.Padasalai.Net www.TrbTnpsc.com

| இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2024 | தேர்வு எண் |
|---|---|
| காலம் : 3.00 மணி **XII - வணிகவியல்** | மதிப்பெண் : 90 |

பகுதி - 1

குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (20×1=20)

2) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தன் வணிகர் பங்குச் சந்தையில் ஈடுபடுவது ________ ஆகும்
அ) அவர்களின் வாடிக்கையாளர்களுக்காக
ஆ) தனது சொந்த நடவடிக்கைகளுக்காக
இ) மற்ற தரகர்களுக்காக ஈ) மற்ற உறுப்பினர்களுக்காக

2. சந்தையிடுகையில் சந்தையிடுகையாளர் முதலில் தெரிந்து கொள்ள விரும்புவது
அ) வாடிக்கையாளரின் தகுதி ஆ) பொருளின் தரம்
இ) வாடிக்கையாளரின் பின்புலம் ஈ) வாடிக்கையாளரின் தேவைகள்

3. தொழில் முனைவோரை கீழ் குறிப்பிட்டபடி எப்படி வகைப்படுத்த முடியாது?
அ) இடர்தாங்கி ஆ) புதுமை படைப்பவர்
இ) ஊழியர் ஈ) அமைப்பாளர்

4. நுகர்வோர் இயக்கத்தின் தந்தை யார்?
அ) மகாத்மா காந்தி ஆ) ஜான்.எப்.கென்னடி
இ) ரால்ப் நேடர் ஈ) ஜவஹர்லால் நேரு

5. வேலையை பல்வேறு சிறுபணிகளாகப் பிரிப்பதை ________ என்பர்
அ) ஒழுங்கு ஆ) பயன்பாடு இ) வேலைப்பகிர்வு ஈ) சமத்துவம்

6. வணிகத்தின் பரந்த சூழல் ஒரு ________ காரணியாகும்
அ) கட்டுப்படுத்த முடியாது ஆ) கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது
இ) சமாளிக்கக் கூடியது ஈ) சமாளிக்க முடியாதது

7. தேசியப் பங்குசந்தையில் புறத்தோற்றமற்ற பத்திர வர்த்தகம் தொடங்கிய ஆண்டு ________
அ) ஜனவரி 1996 ஆ) ஜூன் 1996
இ) டிசம்பர் 1996 ஈ) டிசம்பர் 1998

8. கீழ்க்கண்டவற்றுள் கண்ணுக்குப் புலப்படாத பொருள் எது?
அ) கல்வி ஆ) கைபேசி இ) ஆடைகள் ஈ) வாகனங்கள்

9. ________ன் உதவியுடன் இலக்குகள் அடையப்படுகின்றன
அ) செயலூக்கமளித்தல் ஆ) கட்டுப்படுத்துதல்
இ) திட்டமிடுதல் ஈ) பணியமர்த்தல்

10. ________ உரிமைகள் சர்வதேச மட்டத்தில் வலுவான அஸ்திவாரத்தின் காரணமாக தைரியமான மேலாண்மை முடிவுகளை எடுக்கின்றன
அ) தனியார் ஆ) பொது இ) கார்ப்பரேஷன் ஈ) MNCஇன்

11. வணிக மாற்றுச்சீட்டுகளை வாங்குவதற்கும் விற்பதற்குமான சந்தையை ________ என்று அழைக்கலாம்
அ) வணிகத்தாள் சந்தை ஆ) கருவூல இரசீது சந்தை
இ) வணிக இரசீது சந்தை ஈ) மூலதனச்சந்தை

12. இணையவழி ஆட்சேர்ப்பு என்பது ________ மூலமே சாத்தியம்
அ) கணினி ஆ) இணையம் இ) அகன்றவரிசை ஈ) 4ஜி

13. பணிவழியற்ற பயிற்சி எங்கு அளிக்கப்படுகிறது?
அ) வகுப்பறையில் ஆ) வேலையில்லா நாட்களில்
இ) தொழிற்சாலைக்கு வெளியே ஈ) விளையாட்டு மைதானத்தில்

14. பொருத்தமற்ற வேட்பாளரை நீக்குவதற்கான செயல்முறை ________ அழைக்கப்படுகிறது
அ) தேர்வு ஆ) ஆட்சேர்ப்பு இ) நேர்காணல் ஈ) தூண்டுதல்

15. முக்கியமான சிக்கல்களைக் கண்டறிவதன் மூலம், வாய்ப்புகளையும் அச்சுறுத்தல்களையும் மேலாண்மை எச்சரிக்கையாக வைத்திருக்க ________ உதவுகிறது
அ) முதுகலை வணிக நிர்வாகம் ஆ) விதிவிலக்கு மேலாண்மை
இ) முதுகலை வணிக மேலாண்மை ஈ) குறியிலக்கு மேலாண்மை

16. திட்டமிடல் என்பது ________ செயல்பாடு ஆகும்
அ) தேர்ந்தெடுக்கப்பட்ட ஆ) பரவலான / ஊடுருவலான
இ) அ மற்றும் ஆ இரண்டும் ஈ) மேலே உள்ள எதுவும் இல்லை

17. மூலதனச்சந்தை என்பது ________க்கான ஒரு சந்தை ஆகும்
அ) குறுகிய கால நிதி ஆ) நடுத்தர கால நிதி
இ) நீண்ட கால நிதி ஈ) குறுகிய கால நிதி



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner

18. இந்தியாவின் புகழ்பெற்ற பம்பாய் பங்குச்சந்தை அமைந்துள்ள தெருவின் பெயர் ________

அ) லம்பார்டு தெரு ஆ) தலால் தெரு

இ) வால் தெரு ஈ) பாம்பே தெரு

19. பகராள் என்பவர்

1) நிறுமக்கூட்டத்தில் ஒரு பங்குநரின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ள முடியும்

2) வாக்களிக்க முடியும்

அ) 1 சரியானது மற்றும் 2 சரியானது ஆ) 1 தவறானது மற்றும் 2 சரியானது

இ) 1 சரியானது மற்றும் 2 தவறானது ஈ) 1 தவறானது மற்றும் 2 தவறானது

20. பொருத்துக.

a) இந்திய கூட்டாண்மைச் சட்டம் - 1) 1930

b) மாற்றுமுறை ஆவணச்சட்டம் - 2) 2013

c) சரக்கு விற்பனைச்சட்டம் - 3) 1932

d) இந்திய நிறுமச்சட்டம் - 4) 1881

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| அ) | iii | ii | i | iv |
| ஆ) | i | ii | iii | iv |
| இ) | ii | iii | iv | i |
| ஈ) | iii | iv | i | ii |

## பகுதி - 2

*குறிப்பு: ஏதேனும் 7 வினாவிற்கு விடையளி. (அவற்றில் கட்டாய வினா 30)* ***(7x2=14)***

21. மேலாண்மைக் கருவிகளை பட்டியலிடுக.
22. முக்கிய முடிவுகள் பகுதிகள் (KRA) என்றால் என்ன?
23. இரண்டாம் நிலைச் சந்தையில் விலை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது?
24. பல்வேறு அடையாள ஆதாரங்கள் யாவை?
25. ஆட்சேர்ப்பு முறையில் வேட்டையாடுதல் என்றால் என்ன?
26. தரப்படுத்துதல் என்றால் என்ன?
27. VUCA - விரிவாக்கம் தருக.
28. டிஜிட்டல் இந்தியாவைப் பற்றி குறிப்பு வரைக.
29. இரண்டு வகை கீறல்களை விவரி.
30. குறைவெண் என்றால் என்ன?

## பகுதி - 3

*குறிப்பு: ஏதேனும் 7 வினாவிற்கு விடையளி. (அவற்றில் கட்டாய வினா 40)* ***(7x3=21)***

31. பணியமர்த்தல் என்றால் என்ன?
32. மூலதனச்சந்தையின் ஏதேனும் இரண்டு பணிகளை விளக்குக.
33. வணிக ரசீதின் வகைகளை விளக்குக.
34. மான் மற்றும் முடவாத்து - விளக்குக.
35. மனித வளத்தின் முக்கியத்துவம் என்ன?
36. சந்தையில் என்னென்ன பொருட்களை சந்தையிட முடியும்?
37. தனியிடச் சந்தை பற்றி விளக்குக.
38. தேசிய ஆணையத்தின் உறுப்பினர்கள் பற்றி விவரி.
39. காலம் கடத்தும் பழமைவாத தொழில்முனைவோர் பற்றி சுருக்கமாக விளக்குக.
40. நிழல் இயக்குனர் என்று யாரை அழைக்கிறோம்?

## பகுதி - 4

*குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.* ***(7x5=35)***

41. அ) நேர்காணலின் வகைகளை விளக்குக. ***(அல்லது)***

ஆ) பல்வேறு வகையான நிறுமக் கூட்டங்களை விளக்குக.

42. அ) பணிவழிப்பயிற்சிக்கும் பணிவழியற்ற பயிற்சிக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக. ***(அல்லது)***

ஆ) பங்குகளுக்கும் கடனீட்டுப் பத்திரத்திற்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.

43. அ) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகின்றன? ***(அல்லது)***

ஆ) இந்திய பொருளாதாரத்தில் LPG யின் தாக்கத்தை விளக்குக.

44. அ) மேலாண்மையின் அடிப்படைக் கருத்துக்களை விவரி. ***(அல்லது)***

ஆ) மூலதனச்சந்தையின் பல்வேறு பணிகளை விவரி.

45. அ) மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சினைகளை விளக்குக.

***(அல்லது)***

ஆ) செபியின் பணிகளை விவரி.

46. அ) நுகர்வோரின் கடமைகளை விளக்குக. ***(அல்லது)***

ஆ) அரசுப்பத்திரங்களின் இயல்புகளை விவரி.

47. அ) நிபந்தனை மற்றும் நம்புறுதிகளை வேறுபடுத்துக. ***(அல்லது)***

ஆ) மேலாண்மையின் பணிகளை விளக்குக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner